செ.வெ.எண்: 731/2016 நாள்: 18.10.2016

# பத்திரிக்கைச் செய்தி:-

கன்னியாகுமரி மாவட்டத்தில் அனுமதியின்றி வைக்கப்பட்டுள்ள விளம்பர பலகைகள், பிளக்ஸ் போர்டுகள் மற்றும் விளம்பர தட்டிகளை அகற்றிட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் 18.10.2016 அன்று பகல் 12.00 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நாஞ்சில் கூட்ட அரங்கில் வைத்து ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி), உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) (பொ), உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்), அனைத்து நகராட்சி ஆணையாளர்கள், அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் அனைத்து பேரூராட்சிகள் செயல் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

டிராப்பிக் டாக்டர் கே.ஆர். ராமசாமி என்பவரால் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கு எண் 17730/2016-க்கு மாண்புமிகு உயர்நீதி மன்றத்தால் 27.09.2016 தேதியில் வெளியிடப்பட்ட தீர்ப்பினை செயல்படுத்தும் பொருட்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் அனுமதியின்றி வைக்கப்பட்டுள்ள பிளக்ஸ்போர்டுகள், பிளக்கார்டுகள், விளம்பர தட்டிகள் மற்றும் விளம்பர பலகையினை உடனடியாக அகற்றிட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அனுமதியின்றி வைக்கப்பட்டுள்ள அனைத்து விளம்பர பலகைகள், பிளக்கார்டுகள் மற்றும் பிளக்ஸ் தட்டிகளை தொடர்புடைய உரிமையாளர்கள் உடனடியாக பொது மக்களுக்கு எந்தவிதமான இடையூறு இல்லாமல் அகற்றிட வேண்டும். தவறினால் சம்மந்தப்பட்ட உரிமையாளர்கள் மீது காவல் துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படுவதோடு அனுமதி பெறாத விளம்பர பலகைகள் மற்றும் பிளக்ஸ் தட்டிகளை சம்மந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்கள், நகராட்சி ஆணையர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் மூலமாக காவல்துறை உதவியுடன் ஒரு வார காலத்திற்குள் அப்புறப்படுத்தப்படும் எனவும் அதற்கான

செலவினங்களை சம்மந்தப்பட்ட உரிமையாளர்களிடமிருந்து வசூலிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இப்பொருள் தொடர்பாக அரசால் அமைக்கப்பட்டுள்ள குழுக்கள் தொடர்ந்து கண்காணிக்கப்படும் எனவும் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து முறையாக அனுமதி பெறாமல் தொடர்ந்து விளம்பர பலகைகள், பிளக்கார்டுகள் மற்றும் பிளக்ஸ் தட்டிகள் வைக்கப்படும் உரிமையாளர்கள் மீது காவல் துறையினரால் குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளுவதோடு விளம்பர பலகைகளையும் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்பு நிர்வாகிகளால் அகற்றப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நிரந்தர விளம்பர பலகைகள், பிளக்கார்டுகள் மற்றும் பிளக்ஸ் தட்டிகள் வைக்க அரசாணை எண் 47 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் : 26.06.2003, ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் நிரந்தர விளம்பர பலகைகள், பிளக்கார்டுகள் மற்றும் பிளக்ஸ் தட்டிகள் வைக்க அரசாணை எண் 41 ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாய்துராஜ் துறை நாள் : 18.05.2009 மற்றும் தற்காலிக விளம்பர பலகைகள், பிளக்கார்டுகள் மற்றும் பிளக்ஸ் தட்டிகள் வைக்க அரசாணை எண் : 175 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் : 16.11.2011-ல் தெரிவிக்கப்பட்டுள்ள நெறிமுறைகளின் படி உரிய படிவத்தில் பூர்த்தி செய்து மாவட்ட ஆட்சித் தலைவரால் முறையான அனுமதி பெற்ற பின்னரே நிரந்தர மற்றும் தற்காலிக விளம்பர பலகைகள், பிளக்கார்டுகள் மற்றும் பிளக்ஸ் தட்டிகள் வைக்கப்பட வேண்டும் எனவும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

(ஓம்/-) சஜ்ஜன்சிங் ரா. சவான்,
மாவட்ட ஆட்சித்தலைவர்
கன்னியாகுமரி மாவட்டம்.

/உண்மை நகல் / உத்தரவுப்படி/

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வ),
கன்னியாகுமரி மாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.